ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# ஸ்ரீ ஸ்ரீநிவாசராமாநுசமகாதேசிகன் ( காடந்தேதி ஆண்டவன் ) வாழித்திருநாமம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# ஸ்ரீ ஸ்ரீநிவாசராமாநுசமகாதேசிகன் (காடந்தேதி ஆண்டவன்) வாழித்திருநாமம்

ஜ்ஞாநாநுஷ்டா$_2$நவைராக்$_3$யமூர்திபூ$_4$தோ முநீஶ்வர: ।
ஸ்ரீவாஸ கு$_3$ருவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ரு’தி$_3$ ॥

ஸ்ரீநிவாஸத$_3$யாபாத்ரம் ஸ்ரீரங்க$_3$பத$_3$ஸம்ஶ்ரிதம் ।
ஸ்ரீவாஸலக்ஷ்மணாக்$_2$யம் தம் தே$_3$ஶிகேந்த்$_3$ரமுபாஸ்மஹே ॥

வாழி திருவரங்க மாநகர் சீர் மாதகவால்
    வாழி ஸ்ரீவாசராமானுசனடிகள் - வாழியவே
மந்திரங்களுருக் கொண்ட மாமுனியின் பேரருளால்
    தீதற நங்கட் கருளும் சீர்

வேத முடியனைத்தும் விளங்க வைத்தான் வாழியே
    தீதற்ற தொன்னெறிகள் தெளிவித்தான் வாழியே
பரதனது பெற்றிமையைப் பேணி நின்றான் வாழியே
    பார்முழுதும் பாதுகைகள் புகழுரைத்தான் வாழியே
மந்திரமே உருவாய மாதவத்தோன் வாழியே
    மனத்துக்கண் மாசில்லா மாமுனிவன் வாழியே
ஆவணி மூலமதில் அவதரித்தான் வாழியே
    சீவாச எதிராசன் சேவடிகள் வாழியே

அகிலமெலாம் வாழ ஆசானின்னருளால்
    முகிலன்ன மேனியன் தன் அருள்வாழ - இகலில்லா

மன்னிய சீர் மார்புற்ற மாமுனிக்கோனாசானே
    இன்னுமொரு நூற்றாண்டிரும்

## திருநாள் பாட்டு

ஆரண தேசிகனருளுருவாய்ப் பினுமவனியிற்றோன்றிடுநாள்
    சீர்மலி செந்நெறி செவ்வியனைத்துமே சேர்ந்திடுமுத்தம நாள்
ஏதமிலா எதிராசனருள் நெறி ஏற்ற மிகுந்திடு நாள்
    வேதமுரை மறையோரனைவரும் வீரமுணர்ந்திடு நாள்
அருள் தருமந்திரம் ஆமிவநெங்கள் முதல்வனெனும் திருநாள்
    தெருளறு தேசிகர் காட்டிய தொல்வழி தேசுமிகுந்திடுநாள்
தேவரும் தம்மவர் சூழ வணங்கிடும் நீர்மை நிறைந்திடு நாள்
    ஆவணி மூலமெனும் பெயர் பெற்றவருள் நிறை திருநாளே

ஸ்ரீ ஸ்ரீநிவாசராமாநுசமகாதேசிகன் வாழித்திருநாமம் முற்றிற்று